3. தகவல் கோரல்

(அ) கிழக்குக் கடற்கரைச் சாலையில் அதிகமான கட்டடங்கள் கட்டப்பட்டிருப்பதாக 'இந்து' நாளிதழ் செய்தி

திரு லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, ஒவ்வொருவராகக் கூப்பிடுகிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். திரு. சந்தானம் (குறுக்கீடு) கூப்பிடுகிறேன். திரு. லா. சந்தானம்.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு 'இந்து' நாளிதழிலே ஒரு செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது. மிக முக்கியமான கிழக்குக் கடற்கரைச் சாலையிலே மிக அதிகப்படியான கட்டடங்கள் கட்டப்பட்டிருப்பதாக அந்தச் செய்தியிலே கூறப்பட்டிருக்கிறது. அதனுடைய உண்மை நிலை என்ன என்பதை அரசு விளக்குமா என்பதைத் தங்கள் மூலம் தெரிந்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கு ஏதாவது பதில் இருக்கிறதா? சொல்லுங்கள்.

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையை அடுத்துள்ள கிழக்குக் கடற்கரைச் சாலையை நவீனப்படுத்தும் பணி மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தில் முதலமைச்சராக இருந்த 1992ஆம் ஆண்டிலேயே ஆசிய வளர்ச்சி வங்கி உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டதாகும். சமீபத்தில் அதனை மேம்படுத்தும் பணி மற்றும் நவீனப்படுத்தும் பணி முடிக்கப்பட்டு 24-3-2002 அன்று மக்கள் உபயோகத்திற்காக திறந்து விடப்பட்டிருந்தது. சென்னையிலிருந்து மகாபலிபுரம் வரையிலும் அதன் பின்னர் பாண்டிச்சேரி வரையிலும் செல்கின்ற இந்தக் கிழக்குக் கடற்கரைச் சாலை TIDCO மற்றும் Infrastructure Leasing and Financial Services ஆகிய இரு நிறுவனங்களின் கூட்டு முயற்சியோடு Build, Operate, Transfer- உருவாக்கி, இயக்கி, ஒப்படைப்பது என்ற அடிப்படையில் தனியார் துறையினால் தொடங்கி முடிக்கப்பட்டு

தற்போது நிருவகிக்கப்பட்டு வரும் பணியாகும். இந்தத் திட்டத்திற்காக முதலீடு செய்த இந்தச் சாலையின் உரிமையாளர்களான நிறுவனங்கள் இந்தச் சாலையைப் பயன்படுத்துகிற வாகன உபயோகிப்பவரிடமிருந்து கட்டணமாகப் பெறுவது நடைமுறையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட செயல்முறையே ஆகும். அதுபோலவே நாட்டின் பல பாகங்களிலும் குறிப்பாக மும்பை-பூனா நவீனப்படுத்தப்பட்ட நெடுஞ்சாலை, வதோதரா-கலோல் நவீனப்படுத்தப்பட்ட நெடுஞ்சாலை ஆகியவை உருவாக்கப்பட்டு தற்போது பயன்பாட்டில் இருந்து வருகிறது. இன்னும் சொல்லப்போனால் கடந்த தி.மு.க. ஆட்சியில் கோயம்புத்தூர் புறவழி நெடுஞ்சாலை. . . .

திரு. சி. ஞானசேகரன்: திரு. சந்தானம் கேட்டது கட்டடங்கள் பற்றி, அமைச்சர் சொல்வது சாலை பற்றி. நான்கூட இதுகுறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் அறிவிப்பு கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. அந்த ஒத்திவைப்புத் தீர்மானம் வரும்போது எடுத்துக்கொள்ளலாம். இப்போது கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது என்று சொல்லிக் கேட்கிறார்கள். (குறுக்கீடு) ஒத்திவைப்புத் தீர்மானம் வரும்போது எடுத்துக் கொள்ளலாம். (குறுக்கீடு) ஒத்திவைப்புத் தீர்மானம் வரும்போது எடுத்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: இன்றைய இந்து பேப்பரில் சாலையைப் பற்றித்தான் வந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த ஒத்திவைப்புத் தீர்மானம் வரும்போது எடுத்துக்கொள்ளலாம். திரு. ஞானசேகரன், என்ன வேண்டும் கேளுங்கள்.

(ஆ) கோவையில் நடந்த கொலை சம்பவங்கள்

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தங்களுடைய அறையில் பல நாட்களாக ஏற்கெனவே கோவையிலே நடந்த சுல்தானுடைய கொலை பற்றியும், முருகேசனுடைய கொலை பற்றியும்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. (குறுக்கீடு) திரு. பரிதி, சொல்லுங்கள். (குறுக்கீடு)

2002 ஏப்ரல் 3] [பேரவைத் தலைவர்]

அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. அறைக்கு வாருங்கள். விளக்கம் சொல்கிறேன்.

(இ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

***திரு. பரிதி இளம்வழுதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் நடைபெற்ற ஒரு சம்பவம் குறித்து 2, 3 நாட்களுக்கு முன்பே ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருந்தேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அந்த உண்டியல் திருட்டு தானே?* (குறுக்கீடு) *அது துறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அறைக்கு வாருங்கள். விளக்கம் சொல்கிறேன். திரு. ஜெ. அன்பழகன்* (குறுக்கீடு) *திரு. அன்பழகன் சொல்லுங்கள்.....*

திரு. பரிதி இளம்வழுதி: *நான் கொடுத்து 2, 3, நாட்கள் ஆகின்றன.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. தாங்கள் கொடுத்து இருக்கிறீர்கள். நான் விளக்கம் சொல்கிறேன்.* (குறுக்கீடு) *இல்லை, உட்காருங்கள்* (குறுக்கீடு) *இல்லை, இல்லை. உட்காருங்கள்.*

(அ) கிழக்குக் கடற்கரைச் சாலையில் அதிகமான கட்டடங்கள் கட்டப்பட்டிருப்பதாக 'இந்து' நாளிதழ் செய்தி—தொடர்ச்சி

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *இன்று 'இந்து' நாளிதழில் சாலை பற்றிய விவரங்கள் செய்தியாக வந்ததால் இந்த விவர அறிக்கையை நான் தெரிவித்தேன். கட்டடங்கள் பற்றிய விவர அறிக்கை வந்தவுடன் தெரிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

(இ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. ஜெ. அன்பழகன்.*

திரு. ஜெ. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடபழனியில் பட்டப் பகலில்..*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. அன்பழகன், அது நடைபெற்ற செய்தி, அதைக் கொடுத்திருக்கிறீர்கள். அறைக்கு வாருங்கள். விளக்கம் தருகிறேன். திரு. இரா. திருமாவளவன்.*